# ★ அணு ஆயுதபோர்; இந்தியா கடும்எச்சரிக்கை


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL' TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 30 இதழ் 3
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 13—02—1992


(புதுடில்லி)
பாகிஸ்தான், இந்தியா மீது அணுவாயுதப் போர் ஒன்றைத் திணித்தால் பாகிஸ்தான் பரம்பரை பரம்பரையாக துன்பப்படும் வகையில் இந்தியா பதிலடி தருமென்று
(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் - தீவிரவாதிகள் பலத்த மோதல்

(ராவல்பிண்டி)
இந்தியாவின் எல்லையை கடப்போம் என சபதம் செய்து கொண்டு பேரணியாக வந்து கொண்டிருக்கும் ஜம்மு-காஷ்
(4-ம் பக்கம் பார்க்க)

## நான்கு தமிழர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தின் பன்சேனை பகுதியில் இராணுவம் 4 தமிழரை சுட்டுக் கொலை செய்துள்ளது
(4-ம் பக்கம் பார்க்க)

# யாழ். குடா மீதான தாக்குதல் நிரந்தர பிளவை ஏற்படுத்தும்

## 'சண்டே ஒப்ஸவர்' தகவல்

(கொழும்பு)
யாழ். குடா மீது இராணுவம் பாரிய தாக்குதலை தொடுத்தால் பொதுமக்களின் அழிவு கணக்கிடமுடியாத அளவிற்கு பேரழிவை ஏற்படுத்துவதுடன் இது நாட்டில் ஒரு நிரந்தர பிளவை ஏற்படுத்தும் என 'சண்டே ஒப்ஸவர்' பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.
(4-ம் பக்கம் பார்க்க)

## மன்னார்த்தீவில் சிங்கள குடியேற்றம்

(மன்னார்)
மன்னார்தீவில் பாரம்பரிய வாழ்ந்துவந்த தமிழ்மக்கள் வெளியேற்றப்பட்டு, அவ்விடங்களில் சிங்கள மக்களை குடியமர்த்துவதில் அரசு திட்டமிட்டு செயற்பட்டுவருவதாக
(4ம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சிகளிடையே பிளவு அதிகரிப்பு

(கொழும்பு)
வெகுவிரைவில் நடைபெறவிருக்கும் கொழும்பு-கதிர்காமம் பாதயாத்திரை தொடர்பாக அம்பாந்தோட்டை மாவட்ட ஸ்ரீ. ல. சு. க. எம். பி. மகிந்த ராஜ
(4ம் பக்கம் பார்க்க)

## குடாநாடு மீது மாத இறுதியில் படை நடவடிக்கை ஆரம்பம்?

(கொழும்பு)
யாழ் குடா மீது பெப்ரவரி கடைசியில் அல்லது மார்ச் மாத முற்பகுதியில் இராணுவ தாக்குதல் ஆரம்பமாகும் சாத்தியம் அதிகரித்திருப்பதாக இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி சண்டே ஒப்ஸவர்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இத்தகைய வெளிநாட்டு களிலிருந்து தருவிக்கப்பட்ட

## டிக்ஷிற் - கூட்டணி புதுடில்லியில் சந்திப்பு

(புதுடில்லி)
இந்திய வெளியுறவுச் செயலர் திரு: ஜே. என். டிக்ஷித்தை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் புதுடில்லியில் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தியுள்ளனர்.

கூட்டணி எம். பி, மாவை சேனாதிராசா தலைமையில் கடந்த வாரம் புதுடில்லி சென்ற இக்குழுவினர் திரு: டிக்ஷித்தையும் அதிகாரிகள் பலரையும் சந்தித்து பேசியுள்ளனர்.

ராஜீவ் கொலையில் திரு: பிரபாகரன் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது குறித்தும் இவர்கள் பேசியதாக கூறப்படுகிறது. (ஐ)

## 20ம்திகதிமுதல்தீவுபகுதியில் சிவில் நிர்வாகம் அமுலாம்?

(கொழும்பு)
யாழ்ப்பாண மாவட்டத்தின் தீவுப்பகுதிகளில் இம் மாதம் 20ம் திகதி முதல் மீண்டும் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊர்காவற்றுறை, மண்டைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, காரைநகர் ஆகிய பகுதிகளிலேயே மீண்டும் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட இருக்கிறது.

தீவுப்பகுதி மக்களின் அலுவல்களை கவனிப்பதற்கென மேலதிக அரச அதிபர் ஒருவரும், மூன்று உதவி அரச அதிபர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர், ஒன்பது கிராம சேவையாளர்கள் ஆகியோர் நேற்று நியமிக்கப்பட்டுள்ளனர்.

15, 000ரூபா பெறுமதியான 25 நீர் இறைக்கும் இயந்திரம்
(4-ம் பக்கம் பார்க்க)

## தெற்கில் அரசுக்கு புதிய நெருக்கடி

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு முகம் கொடுத்து வரும் அரசுக்கு தென்பகுதியில்வேறொரு முனையிலிருந்து பிரச்சினை தோன்றக் கூடிய அறிகுறி காணப்படுவதாக பிரசாரம் செய்யப்படுகின்றது. இது பற்றி தென்பகுதியில் சில தீயசக்திகள் முயற்சிக்கின்றன என தகவல் தொடர்பு அமைச்சர் திரு: ஏ. ஜே. ரணசிங்கா கூறியுள்ளார்:

வடபகுதிக்கு அண்மையில் கிறிஸ்தவ மதகுருமார் சமாதான முயற்சியொன்றை மேற்கொண்டிருந்த இதேவேளை கண்டி மல்வத்த பீடாதிபதி
(4-ம் பக்கம் பார்க்க)

## 3 அமைச்சர்கள் தீவகம் விஜயம்

(கொழும்பு)
தீவுப்பகுதிக்கு நேற்று 3 அமைச்சர்கள் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டனர்.

அமைச்சர்கள் திரு: பெஸ்டஸ் பெரேரா, திரு. ஜோசப் மைக்கல் பெரேரா, திரு. பி. தயாரத்ன ஆகியோர் தீவுப்பகுதியில் சிவில் நிர்வாகம் ஏற்படுத்துவது குறித்து இப
(4-ம் பக்கம் பார்க்க)

## 4-வது யுத்தத்திற்கு பாக். விரும்பவில்லை

(இஸ்லாமாபாத்)
இந்தியாவுடன் நான்காவது போர் ஒன்று ஏற்படுவதை பாகிஸ்தான் விரும்பவில்லையென பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரிப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: ஜம்மு-காஷ்மீர் தீவிரவாதிகள் எல்லைக் கட்டுப்பாட்டுக்கோட்டைக் கடப்பதனை பாகிஸ்தான் பாதுகாப்புப் படைகள் தடுத்துவிடுமென்று தாம் நம்பிக்கையுடன் இருப்பதாகவும் குறிப்பிட்டார். (ஐ)

## சீனாவிலிருந்து சுப்பசொனிக் யுத்த விமானங்கள் கொள்முதல்

(கொழும்பு)
சீனாவிலிருந்து பல 'சுப்பசொனிக்' போர்விமானங்களை இலங்கை விமானப் படை கொள்வனவுசெய்யும். இவற்றில் எவ்-15, எவ்-7, எவ் பீ-7, சோவியத் பாணியிலான மிக் 21 ஆகிய போர் விமானங்களும் அடங்குகின்றன. பாரிஸில் இலங்கைக்கு
(4-ம் பக்கம் பார்க்க)

